**கவனிக்க.-** *2010.12.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1687 - 2010 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2010.12.31**

*1687 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2046 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2052 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுற்றாடல் அமைச்சு

வனத் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையின் பயிற்சித் தரத்தில் வட்ட வன அதிகாரி (தமிழ்) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்-2010

வனத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையின் பயிற்சித்தரத்தில் வட்ட வன அதிகாரி (தமிழ்) பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. சம்பள விகிதம் :**

(1) பயிலுநர் தரம் : (MN1 – 2006ஏ – பொது நிருவாக சேவை சுற்றறிக்கை 6/2006 (IV) பிரகாரம் - ரூபா 13,120 – 145 x 1 - ரூபா 13,265.

(2) வகுப்பு II 'ஆ' : (MN3 – 2006எ – பொது நிருவாக சேவை சுற்றறிக்கை 07/2008 (IV) பிரகாரம் - ரூ. 15,005 – 180 x 4,240 x 6 – ரூபா 17,165.

**3. பணிக்கமர்த்தும் நியதிகள், சேவை நிபந்தனைகள்.**- (i) இந்நியமனம் நிரந்தரமானது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவித்தொகை வழங்குதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தினைக் கொண்டதாகும்.

(iii) பயிலுநர் தரத்திற்கு இந்நியமனம் சேர்த்துக்கொள்ளப்படும்.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தப் பகுதியிலுமுள்ள எந்தவொரு காட்டுப் பகுதியிலும் பணி புரிவதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும். அத்துடன் ஆட்சேர்த்துக்கொண்டதன் பின்பு குறைந்தது ஐந்து வருட காலத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கட்டாயமாகப் பணிபுரிதல் வேண்டும்.

(v) இலங்கை தொழில்நுட்பவியல் சார் சேவையின் பிரமாணக் குறிப்புகளில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பாக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையின் பிரமாணக் குறிப்புகளில் வட்ட வன அதிகாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் உயர்வு (திருத்த) நடைமுறைகள் ஏற்புடையதாகும்.

(vi) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகளுக்கும் ஏற்புடையதாக அமையும்.

(vii) தமிழ் மொழியில் மட்டும் பரீட்சை நடாத்தப்படும்.

**4. வயதெல்லை.**- விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதின் மேலெல்லை ஏற்புடையதாகாது.)

**5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**- எல்லா விண்ணப்பதாரிகளும் கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் அல்லது விவசாயவியல் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) தாவரவியல், விலங்கியல் அல்லது விவசாயவியல் உட்பட இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், தூய கணிதம் அல்லது கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு (04) திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) ஆண் விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் 5 அடி 2 அங்குலம் உயரத்தையும் 32 அங்குல மார்பளவையும் கொண்டவர்களாகவும் பெண் விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் 5 அடி உயரத்தைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(vi) நல்லொழுக்கம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

*6. **ஆட்சேர்க்கும் முறை**.-* (i) *பந்தி 05 இன் பிரகாரம் தகைமைகளை பூர்த்திசெய்பவர்களும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கும் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தேர்வு மேற்கொள்ளப்படும். (நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.)*

(ii) *பந்தி 06 (அ) இன் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிலுநர் தரத்தில் வைக்கப்படுவர். இலங்கை வனவியல் கல்லூரியில் இரண்டு வருட கோட்பாடு மற்றும் செய்முறைசார் பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததின் பின் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையின் வகுப்பு* II *'ஆ' இற்கு உள்ளீர்க்கப்படுவர்.*

(iii) *தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் நெறியை (மூன்று வருட பகுதிநேர பயிற்சிநெறி) வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து கொண்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை வனவியல் கல்லூரியில் ஒரு வருட கோட்பாடு மற்றும் செய்முறைகள் பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததின் பின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவைகளின் வகுப்பு* II *ஆ இற்கு உள்ளீர்க்கப்படுவர்.*

(iv) *இலங்கையில் ஏதாவது அரச சார்பு நிறுவனமொன்றில் விவசாயவியலில் இரு வருட டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையின் வகுப்பு* II *'ஆ' இற்கு நியமிக்கப்படுவர்.*

(v) *பந்தி 6 இன் ('அ' இல் இருந்து 'ஈ' வரை) கீழ் ஆட்சேர்க்கப்பட்ட எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கை வனவியல் கல்லூரியில் இரண்டு வருட பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்துகொள்வது கட்டாயமாகும்.*

*7. **எழுத்துப் பரீட்சை**.- எழுத்து பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் -*

(i) *நுண்ணறிவு பரீட்சை (உளச்சார்பு) ஒரு மணித்தியாலம் (01) – 100 புள்ளிகள்.*
*விண்ணப்பதாரியின் எண்ணிலான ஆற்றல், தர்க்க ஆற்றல், பகுப்பாய்வு தகுதி மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் போன்றவைகளை மதிப்பீடு செய்யும் வண்ணம் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பல்லின தேர்வு வினாக்கள் மற்றும் சிறு விடை வினாக்களையும் கொண்டிருக்கும்.*

(ii) *தொழில்நுட்ப பரீட்சை (இரண்டு மணித்தியாலம்) (02) - 100 புள்ளிகள்.*
*பின்வரும் விடயங்களில் விண்ணப்பதாரரின் அறிவினை பரீட்சித்துப் பார்ப்பதற்காக கட்டமைப்பு மற்றும் பகுதி கட்டமைப்புசார் வினாக்களைக் கொண்டிருக்கும் :-*

*பாடத்திட்டம் :*

(அ) *காட்டு வளங்களின் முகாமைத்துவம் மற்றும் பயன்பாடும்*
(ஆ) *இலங்கைச் சுற்றாடல் மற்றும் புவியியல் அமைப்பு*
(இ) *இலங்கையின் விவசாய பொருளாதாரம்*
(ஈ) *சுற்றாடல் அமைச்சு மற்றும் வனத் திணைக்களம் ஆகியவற்றின் முக்கிய தகவல்கள், அவைகளது நோக்கம் மற்றும் குறிக்கோள்கள்*
(உ) *சுற்றாடல், வன வளங்கள் மற்றும் காடுகள் மற்றும் தாவரம் தொடர்பான அறிவு*
(ஊ) *காடு மற்றும் சமூகத்திற்கிடையிலான நெருங்கிய உறவும் அதன் முக்கியத்துவமும்*
(எ) *அடிப்படை தாவரவியல் மற்றும் புவியியல்*
(ஏ) *பொது அறிவு*

*8. **விண்ணப்பிக்கும் முறையும் ஏனைய தகவல்கள்**.-* (i) *இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் 21 x 29 செ. மீ.* (A4) *கடதாசியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு 2011, பெப்புருவரி 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்புமுறை மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டும். (ஏதேனும் பிரத்தியேக விலாசத்திற்கு அல்லது வேறு விலாசத்திற்கு அனுப்பப்படலாகாது. அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "வட்ட வன அதிகாரி (தமிழ்) பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2010" எனக் குறிப்பிடல் வேண்டும்.*

(ii) *பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.*

(iii) *தபாலில் காணாமற்போகும் விண்ணப்பங்களுக்கு பொறுப்புக் கூறப்படாது.*

(iv) *விண்ணப்பதாரர்களின் கையொப்பம் பின்வரும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், தரைப்படை, கடற்படை, விமானப்படை அல்லது காவல்துறையைச் சேர்ந்த அதிகாரம் கொண்ட அதிகாரி ஒருவர் அல்லது தேசிய அல்லது மாகாண சபையின் நிரந்தர மேலதிகாரி ஒருவர் அல்லது விண்ணப்பதாரர் வசிக்கும் இடத்தின் கிராம சேவையாளர் பிரிவின் கிராம சேவையாளர் ஆகியோர்.*

(v) *இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அனுகூலமாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

(vi) தேசிய அல்லது மாகாண சபை அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க சம்மதிக்கிறேன் என்ற தலைவரின் உறுதிமொழியுடன் தங்களது விண்ணப்பங்களை அவர்களது நிறுவனங்களின் தலைவர் ஊடாக அனுப்பவேண்டும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணங்கள்.**- (i) பரீட்சைக் கட்டணம் ரூபா 300. அண்மையில் உள்ள பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் இத்தொகையைச் செலுத்தி "வன பாதுகாவலர் நாயகத்தின் பொது வைப்பில்" முதலீடு செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள இடத்தில் பற்றுச்சீட்டு ஒட்டப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரர் வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறது.)

(ii) பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது. அத்துடன் வேறேதேனும் பரீட்சைக்கு அது கட்டணமாக மாற்றப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களில் எல்லாவற்றையும் அல்லது ஏதேனும் ஒரு ஆவணத்தை எந்நேரத்திலும் தேவைப்படும்போது சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தராதரச் சான்றிதழ் ;
(iii) பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்பட்ட கிராமசேவையாளரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட சான்றிதழ் ;
(iv) இரண்டு ஒழுக்கச் சான்றிதழ்கள் ;
(v) வேறு ஏதேனும் சான்றிதழ்கள்.

**தயவுசெய்து கவனிக்கவும்.**- ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது.

11. (i) பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும் :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 2. கண்டி | 3. மாத்தறை | 4. குருநாகல் | 5. இரத்தினபுரி | 6. அனுராதபுரம் |
| 7. பதுளை | 8. அம்பாறை | 9. மட்டக்களப்பு | 10. திருகோணமலை | 11. வவுனியா | 12. யாழ்ப்பாணம் |
| 13. கிளிநொச்சி | 14. முல்லைத்தீவு | | | | |

(ii) மேற்கூறப்பட்ட நிலையங்களில் எவற்றுக்கேனும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து விண்ணப்பதாரர்கள் அருகாமையிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பப்படுவர்.

(iii) பரீட்சைத் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக பரீட்சை நடாத்தப்படும் இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு நுழைவுக் கடிதம் அனுப்பப்படும். பிரயாணச் செலவுகள் இவ்விடயத்திற்காக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. நுழைவுக் கடிதம் அனுப்புவது பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதாக கருதப்படக் கூடாது.

12. **விண்ணப்பதாரரின் அடையாளம்.**- விண்ணப்பதாரர்கள் தங்களது அடையாளத்தை பரீட்சையாளர்களிடம் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும். பின்வருவனவற்றில் ஏதேனும் ஆவணங்கள் இவ்விடயத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான வாகன ஓட்டுதல் சான்றிதழ்.

13. **தவறான தகவல் வழங்குவதற்கான தண்டனைகள்.**- விண்ணப்பதாரர் தகைமை கொண்டவரல்லர் எனக் காணப்பட்டால் அவரது விண்ணப்பம் எந்நேரத்திலும் இரத்துச் செய்யப்படும். அவரது அறிவுக்கு ஏற்ப விண்ணப்பதாரரினால் வழங்கப்படும் விடயங்கள் ஏதேனும் பிழையானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மாற்றியிருந்தால் அவரது தெரிவுக்குப் பின் அரசாங்க சேவையிலிருந்து அவர் நீக்கம் செய்யப்படுவார்.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் வன பாதுகாவலர் நாயகத்தின் தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

வன பாதுகாவலர் நாயகம்.

வனத் திணைக்களம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2010.12.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வன திணைக்களம்**

*வன திணைக்களத்தின் பயிலுநர் வட்ட வன அதிகாரி (தமிழ்) பதவி - 2010*

நகர இல. :

நகரம் :............................
அறிவித்தலின் பந்தி II ஐப் பார்க்கவும்.

1. (i) முதல் எழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கிலத்தில்) :———.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :———.

2. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :———.

3. பால் :
   ஆண் -0, பெண் -1 (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)

4. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :—
   தமிழ்-த (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய அட்சரத்தை எழுதவும்.)

5. இலங்கைப் பிரஜையா ? :———.
   வம்சாவழியினால்-1, பதிவினால்-2 (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)

6. பிறந்த திகதி :———.

   2010.12.31 இல் வயது :-

   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள்

7. தேசிய ஆளடையாள அட்டை இல. :

8. பௌதீக தேவைகள் :

   உயரம் :- ——— அடி ——— அங்குலம்.

   மார்பளவு :——— அங்குலம் (பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதல்ல)

9. கல்வித் தகைமைகள் :

   (i) க. பொ. த. (சாதாரண தரம்) :

   1 ஆவது அமர்வு.-

   ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

*2 ஆவது அமர்வு.-*

ஆண்டு :———.          சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

(ii) க. பொ. த. (உயர் தரம்)

ஆண்டு :———.          சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

10. மேலதிக கல்வித் தகைமைகள் :———.

11. தொழில்துறை/ஏனைய தகைமைகள் :———.

12. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளர் பிரிவின் பெயர் :———.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :———.

| |
|---|
| பெட்டிக்குள் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை உறுதியாக ஒட்டவும். |

13. (i) நீர் நீதிமன்றத்தால் ஏதேனும் குற்றத்திற்காக குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ?
(ஆம்/இல்லை) :———.

(ii) ஆம் எனில், விபரங்களைத் தரவும் :———.

14. நீர் ஏற்கனவே சேவையில் கடமையாற்றின் விபரங்களைத் தரவும் :

பதவி :———. நிறுவனம் :———.

முதல் நியமனத் திகதி :———.     சம்பளம் :———.

15. உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களைத் தரக்கூடிய உமக்கு சொந்தமற்ற இருவரின் பெயர்களைக் குறிப்பிடவும் :

(i) :———.
(ii) :———.

16. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்படுவதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

17. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ....................................................................... அவர்களை எனக்கு நேரிடையாகத் தெரியும் என்றும் 2010, ......................................................................... திகதியன்று அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :———.
பதவி :———.
விலாசம் :———.
திகதி :———.

18. ***விண்ணப்பதாரர் தேசிய அல்லது மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுபவராயின் இந்தப் பகுதி நிறுவனத் தலைவரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.***

விண்ணப்பதாரர் திரு./ திருமதி/ செல்வி ............................................................................... அமைச்சில்/ திணைக்களத்தில் ..................................................................................... பதவியினை வகிக்கும் நிரந்தர/ தற்காலிக ஊழியர் ஒருவர் எனவும் அவர் கொடுத்திருக்கும் விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பதாரர் இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

———,
திணைக்கள தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட
அதிகாரியின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———. (பதவி முத்திரை)
திகதி :———.

தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.

**தயவுசெய்து கவனிக்கவும்.**- பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டைத் தவிர்த்து வேறு ஆவணம் எதுவும் விண்ணப்பத்தில் இணைக்கப் படலாகாது.

12-1014

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### இலங்கை கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்கு (பொது ஊழியர் கோப்பு/விசேட ஊழியர் கோப்புக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2010

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை இவ்வமைச்சின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். கீழ்க்குறிப்பிடப்படும் அறிவித்தல் களுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவையின் III ஆம் வகுப்பின் வெற்றிடங்களில் இருபத்தைந்து சதவீதம் (25%) இற்குக் கூடாத வெற்றிட எண்ணிக்கைக்கு உத்தியோகத்தர்களை நியமிக்க கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. இவ்வறிவித்தலில் "செயலாளர்" எனப்படுவது கல்வி அமைச்சின் செயலாளர் ஆகும். "சேவை" எனப்படுவது இலங்கைக் கல்வி நிருவாக சேவையாகும். "பிரமாணக் குறிப்பு" எனப்படுவது இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் பிரமாணக் குறிப்பு ஆகும்.

3. **பரீட்சை ஒழுங்குவிதிகள்**.– இப்பரீட்சை நடாத்தப்படுவது I ஆவது மற்றும் II ஆவது பகுதி என்ற வகையில் இரு பகுதிகளாக ஆகும்.

#### *I ஆவது பகுதி*

கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும் :–

(i) *கிரகித்தல்.– 1 1/2 மணித்தியால வினாப்பத்திரம் ஆகும். (விடய இலக்கம் 1) – 100 புள்ளிகள்*

(ii) *விவேகப் பரீட்சை.– 1 மணித்தியால வினாப்பத்திரம் ஆகும். (விடய இலக்கம் 2) – 100 புள்ளிகள்*

சகல பரீட்சார்த்திகளும் இதன் I ஆவது பகுதிக்குத் தோற்ற வேண்டும். பரீட்சையின் I ஆவது பகுதி 2011, ஏப்பிறல் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச்செய்ய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

#### *II ஆவது பகுதி*

கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும் :–

(i) *பொது அறிவு வினாப்பத்திரம்.– 3 மணித்தியால வினாப்பத்திரம் ஆகும். (விடய இலக்கம் 3) – 150 புள்ளிகள்*

(ii) *கட்டுரை வினாப்பத்திரம்.– 3 மணித்தியால வினாப்பத்திரம் ஆகும். (விடய இலக்கம் 4) – 100 புள்ளிகள்*

பரீட்சையின் II ஆம் பகுதிக்குத் தோற்ற தகைமை பெறுவது பரீட்சையின் I ஆம் பகுதியில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சமாக 60% புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மாத்திரமேயாகும். I ஆம் பகுதியில் தகைமை பெறுவோருக்கு பரீட்சையின் II ஆம் பகுதி நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும்.

4. **நேர்முகப் பரீட்சை**.– நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவது தகைமைகள் மற்றும் தேகாரோக்கியத்தை பரிசீலனை செய்வதற்கு மாத்திரமாகும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. இருக்கும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான பரீட்சார்த்திகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெறும் புள்ளிகளுக்கமைய அவர்களின் திறமை வரிசை நிர்ணயிக்கப்பட்டு அதற்கேற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

5. **ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நியமிக்கும் திகதி**.– (i) சேவையின் III ஆம் வகுப்பின் ஊழியர் எண்ணிக்கை "பொது" ஊழியர் எண்ணிக்கை மற்றும் "விசேட" ஊழியர் கோப்பு என அடங்குகிறது. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செல்லுபடியாகும் திகதி செயலாளரினால் தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பும் அல்லது நிரப்பாதிருக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

(ii) பொது ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக விசேட ஊழியர் எண்ணிக்கையின்கீழ் (iii) ஆவது வாசகத்தில் (ஆ) இல் குறிப்பிடப் பட்டுள்ள துறைகளின் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும். ஒரு பரீட்சார்த்திக்கு பொது ஊழியர் எண்ணிக்கைக்கு மற்றும் விசேட ஊழியர் எண்ணிக்கைக்குரியதான மேலும் இரு துறைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விசேட ஊழியர் எண்ணிக்கைக்கு விண்ணப் பிப்பதாக இருந்தால் விண்ணப்பிக்கும் பாடவிதானங்களில் பிரதான பாடங்களில் ஒன்றைக் கட்டத்தில் அடங்கி இருத்தல் தொடர்ந்திருப்பது அத்தியாவசியமாகும் என்பதுடன் பட்டத்திற்காகத் தொடரும் உப பாடங்களின் எண்ணிக்கை 1/3 ஆகும். விண்ணப்பிக்கும் பாடத்திற் குரியதாகப் பாடங்கள் அமைந்திருக்க வேண்டும். திட்டமிடல் மற்றும் விசேட கல்வி பாடங்களுக்காக தேவையான தகைமைகள் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) பாடத்துறைகள் மற்றும் அதற்குரிய குறியீட்டிலக்கம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு இருப்பதுடன் தாம் விண்ணப்பிக்கும் துறை மற்றும் அதற்குரிய குறியீட்டிலக்கம் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

| | | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| (அ) | பொது ஊழியர் எண்ணிக்கை | 11 |
| (ஆ) | விசேட ஊழியர் எண்ணிக்கை பாடத்துறைகள் : | |
| | ஆங்கிலம் | 21 |
| | கணிதம் | 22 |
| | விஞ்ஞானம் | 23 |
| | சித்திரம் | 24 |
| | சங்கீதம் (கீழைத்தேயம்) | 25 |
| | சங்கீதம் (மேற்கத்தேயம்) | 26 |
| | நடனம் | 27 |
| | விவசாயம் | 28 |
| | வர்த்தகம் | 29 |
| | விசேட கல்வி | 30 |
| | திட்டமிடல் | 31 |
| | அரபு | 32 |
| | தகவல் தொழில்நுட்பம் | 33 |

**குறிப்பு**.- திறந்த போட்டிப் பரீட்சையின்கீழ் விசேட ஊழியர் எண்ணிக்கையின்கீழ் விசேட கல்வி ஆகிய பாடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின் கீழ்க்குறிப்பிடப்பட்ட பட்டம் அல்லது பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்து சித்தியடைந்திருக்க வேண்டும் :

விசேட தேவையுடைய சிறார்களின் கல்வி (விசேட கல்வி) தொடர்பில் வழங்கப்படும் கல்விமானி பட்டச்சான்றிதழ் ;

விசேட கல்வி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் ;

விசேட கல்வி தொடர்பான கல்விமாணி அல்லது கலைமாணி பட்டச் சான்றிதழ்.

விசேட ஊழியர் எண்ணிக்கையில் திட்டமிடல் பாடத்திற்காக விண்ணப்பிப்பதாயின் கீழ்க்குறிப்பிடப்பட்ட பட்டம் அல்லது பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்ந்து சித்தியடைந்திருக்க வேண்டும்.

பட்டத்திற்கு விஞ்ஞான பாடத்தை அல்லது பட்டத்திற்குரிய ஏனைய பாடத்துறையில் உப பாடத்துறையாக கற்றிருக்க வேண்டும்.

கணிதம் பட்டப்பாடமாக அல்லது பட்டத்திற்குரிய பாடத்துறையின் உப பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

முகாமைத்துவ மற்றும் திட்டமிடல் முறைமை பட்டப்பாடமாக அல்லது பட்டத்திற்குரிய பாடங்களின் உப பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

கல்வி, விஞ்ஞானம், விழுமியங்கள் மற்றும் சமநிலைக் கல்வி ஆகிய பாடத்துறையின் பட்டப்பாடமாக அல்லது பட்டத்திற்குரிய பாடங்களின் உப பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

சமூகவியல் பட்டப்பாடமாக அல்லது பட்டத்திற்குரிய பாடத்தின் உப பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

உயிரியல் அல்லது பௌதிகவியல் பட்டப் பாடத்துடன் புள்ளி விபரவியல் அல்லது ஆராய்ச்சிப் பணிகள், பட்ட உப பாடத்திற்குரிய பாடத்தின் பகுதியாகக் கற்றிருக்க வேண்டும்.

செலவின முறைமை மற்றும் பொருளாதார மூல அம்சங்கள் பட்டத்துடன் பட்டத்திற்குரிய பாடங்களின் செலவின பகுப்பாய்வு திட்டமிடல் விஞ்ஞான முறைமை அல்லது பொருளியல் ஆராய்ச்சி முறைமை உப பாடமாக கற்றிருக்க வேண்டும்.

(iv) காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கமைய மேல் குறிப்பிடப் பட்ட பல துறைகளுக்காக நியமனங்களை வழங்கும் அல்லது வழங்காம லிருக்கும் உரிமை கல்விச் செயலாளருக்குரியதாகும்.

**6. சேவை நிபந்தனை மற்றும் சேவையிலீடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 423/12 மற்றும் 1986, ஒற்றோபர் 15 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986.03.12 ஆந் திகதிய அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் பிரமாணக் குறிப்பின்கீழ் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை களும் அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு களுக்கும் அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனை களுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(ii) பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கமைய நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றக்கூடியதாக இருக்க வேண்டும்.

(iii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட வேண்டும். நியமனம் 3 வருடகால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(iv) பொது ஊழியர் கோப்பின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தமது சேவைக்காலத்தில் 3 வருடங்கள் அதிபராக 1AB/ 1C பாடசாலையில் கட்டாயமாக சேவையாற்றியிருக்க வேண்டும்.

**7. சம்பள அளவுத்திட்டம்** :

ரூ. 22,935-10x645-8x790-17x1,050-53,555
ரூ. 24,870-முன்னர் I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை
ரூ. 26,805-முன்னர் II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

**8. தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான தர தொழிற் றகைமையாக செயலாளரினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(இ) 2011.01.31 ஆந் திகதியன்று 22 வயதைவிட குறையாது 30 வயதைவிட அதிகரிக்காதிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- (i) சித்தியடைவதற்காக தேவைப்படும் பரீட்சை 2011.01.31 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் ; மற்றும்

(ii) பட்டம் தொழில் அல்லது வேறு பரீட்சை தொடர்பாக உத்தியோகபூர்வ சான்றிதழ் அல்லது அச்சான்றிதழுக்காக செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவணம் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் பரீட் சார்த்தி பட்டம் அல்லது தொழில்சார் தகைமையைப் பெற்றிருப்பதாக கருத்திற்கொள்ளப்படும்.

(iii) 3 தடவைக்கு மேல் இப்பரீட்சைக்குத் தோற்ற எவருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**9. வேறு தகைமைகள்**.- பரீட்சார்த்தி சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் நல்லொழுக்கம் கொண்டவராகவும் செயலாளரினால் திருப்தியடையக்கூடியதாக இருக்க வேண்டும். சிறந்த தேகாரோக்கியம் சிறந்த கண் பார்வை கொண்டவராக இருக்க வேண்டியதுடன் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றக்கூடியதான தேகாரோக்கியம் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கும் பரீட்சார்த்தி வைத்திய பரிசோதனையில் சித்தியடைய வேண்டும்.

**10. பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் I ஆவது பகுதி ரூ. 600.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முன்னர் யாதாயினும் மாவட்டம்/பிரதேச செயலக அலுவலகத்திற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 வைப்பிலிடுவதற்காக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். மாவட்ட/பிரதேச செயலகங்களில் நிதி வைப்பிலிட்டு பெற்ற பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டப்பட வேண்டும். இக்கட்டணம் எதுவும் எக்காரணம் கொண்டும் மீளளிப்புச் செய்யப் படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றம் செய்யப் பட்டவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

II ஆவது பகுதிக்கு ரூ. 400.

பரீட்சையின் இரண்டாம் பகுதிக்காக கட்டணம் செலுத்தவேண்டிய முறை அப்பிரிவிற்கு தோற்ற தகைமை பெறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும்.

11. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கொண்ட கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டும். 1-4 வரையான பகுதிகள் கடதாசியின் 1 ஆம் பக்கத்திலும் 5 தொடக்கம் எஞ்சிய பகுதிகள் மற்றைய பக்கத்திலும் உள்ளடக்குமாறு தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் நிழற்பிரதி தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ஆ) பரீட்சைக்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2011.01.31 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆவது வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2010" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்பதற்குரிய இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) விண்ணப்பப்படிவத்தின் 1:1, 1:2, 2:0, 2:2 பிரிவுகள் ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில் நிரப்பப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்ட மொழிமூலம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட விதிமுறைகளுக்கமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் தவறிப்போதல் அல்லது பிற்படுதல் சம்பந்தமாக எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) அரச கல்லூரியின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது ரூ. 1,28,160 ஐ விடக் குறையாத வருடாந்த சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தரினால் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் ஒப்பம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

(எ) கல்வி அமைச்சின் அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினது சொந்தப் பெயர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஏ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரர் களுக்கு அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பத்திரிகைகள் மூலம் அது தொடர்பாக அறிவித்தல் வழங்கப்படும். அவ்வாறான அறிவித்தல்கள் தொடர்பாக விழிப்புடன் இருப்பது முக்கியமானதாகும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று தினங்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் அறிவித்தலில் குறிப்பிடப்படுமாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின், பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட பிரதியுடன் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு, கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதியாயின் அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய தொலைநகல் இலக்கம் என்பன குறிப்பிடப்பட்ட தங்களது வேண்டுகோள் கடிதம் என்பவற்றை வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயனுடையதாகும்.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சார்த்திக்கு பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி மண்டபப் பொறுப்பாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தி ஒருவரினால் பின்பற்றக்கூடிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன. பரீட்சை நடத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்விதிமுறைகள் மீறப்படுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப் பட்டிருப்பது பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் அவர் பூர்த்திசெய்துள்ளார் என்பதை கருத்திற்கொண்டலல்ல.

(அ) பரீட்சார்த்தியின் அடையாளம் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்ய வேண்டும். இதற்காக கீழ்க்குறிப்பிடப் பட்ட ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

13. **போலித் தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து அவருக்கான பரீட்சை அனுமதி அல்லது நியமனத்தை பரீட்சைக்கு முன்னர் அல்லது

பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சை முடிவடைந்த பின்னர் எந்த நேரத்திலாயினும் இரத்துச்செய்ய இடமுண்டு. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் போலியானதென பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து அல்லது ஏதாவதொரு விடயம் தெரிந்தே மறைக்கப்பட்டிருப்பின் சேவையிலிருந்து நீக்கப் படுவார்.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் தொடர்பாக இறுதி முடிவு செயலாளரது தீர்வாகும்.

15. **மொழி மூலம்**.- (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றவேண்டியது இச்சேவைக்காக தகைமை கொண்ட பரீட்சையில் சித்தியடைந்த மொழி அல்லது அரச கரும மொழி மூலமாகும்.

(இ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பரீட்சையின் பாடங்கள் இரு மொழிகளில் அல்லது அதனைவிட அதிகமான மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பரீட்சையில் அவர் சிததியடைந்த பாடங்களில் அதிக தடவையாக பயன்படுத்தப்பட்ட மொழி அல்லது அரச கரும மொழியில் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடம் ஒரு மொழி மூலமாகவும் மேலதிக பாடம் மற்றுமொரு மொழி மூலமாக சித்தியடைந்துள்ள விசேட பட்டம் கொண்ட பரீட்சார்த்தி பிரதான பாடத்தில் சித்தியடைந்த மொழி மூலம் அல்லது அரச கருமமொழி மூலம் தோற்ற வேண்டும்.

(உ) சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- மேற்கூறப்பட்ட "அ" மற்றும் "இ" இல் தகைமை பெற்ற பரீட்சையாக குறிப்பிடப்படுவது 8(ஆ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையாகும்.

16. **தேர்ந்தெடுக்கும் முறை**.- (அ) தேர்ந்தெடுப்பதற்காக பரீட்சையின் I ஆவது மற்றும் II ஆவது பகுதிகளில் தோற்றியிருந்த போதிலும் பரீட்சையின் 1 ஆவது மற்றும் II ஆவது பகுதிகளில் பெற்ற புள்ளிகளைச் சேர்த்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவரே தேர்ந் தெடுக்கப்படுவார்கள். சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த் திகள் ஒருவரைவிட அதிகமாக இருப்பின் அது தொடர்பாக செயலாள ரினால் தீர்மானம் எடுக்கப்படும்.

(ஆ) எழுத்துமூலப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற தகைமை வரிசைக்கமைய நிரப்ப தேவைப்படும் வெற்றிட எண்ணிக்கை அளவிற்கு மாத்திரம் தகைமைகளை பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(இ) தகைமைகளை பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட ஏதாவதொரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகள் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாமை காரணமாக ஏதாவதொரு வெற்றிடம் ஏற்பட்டால் தகைமை பட்டியலுக்கமைய பட்டியலில் அடுத்தபடியாக உள்ள பரீட்சார்த்தி அவ்வெற்றிடத்திற்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

17. **பாடவிதானம்** :

(i) *கிரகித்தல்*.- பரீட்சார்த்திக்கு சிறிய வாசகங்கள் வழங்கப்படும். ஒருசில வாசகங்கள் தொடர்பாக பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுகளும் வழங்கப்படும். அதில் ஒன்று அவ்வாசகத்தி லுள்ள விடயங்களுக்கு மிகப்பொருத்தமாக இருக்கும். மிகவும் பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்க பரீட்சார்த்திக்கு ஆலோசனை வழங்கப்படும். பரீட்சார்த்தியினால் அவ்வாச கத்தின் கருத்தை விளங்கக்கூடிய முறையை பரிசீலனை செய்யக்கூடிய முறையில் வினாப்பத்திரம் அமைந்திருக்கும்.

(ii) *பொது விவேகப் பரீட்சை*.- பரீட்சார்த்தியின் விவேகத்தை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கும். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களையும், குறும் விடைகளுக்கான வினாக்களாகவும் காணப்படும்.

II ஆம் பகுதி

(i) *பொது அறிவு*.- இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழல்கள் உட்பட பரீட்சார்த்தி வாழும் மற்றும் பணியாற்றும் சூழல் தொடர்பான அறிவை மதிப்பீடு செய்யக்கூடியவகையில் இவ்வினாப்பத்திரம் அமைந்திருக்கும். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சமகால நிகழ்வுகள் மற்றும் விஞ்ஞான தொழினுட்ப விருத்தி தொடர்பாகவும் பரீட்சார்த்தி அறிந்திருக்க வேண்டும். வரையறுக்கப்பட்ட கட்டுரை வினாக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரம் ஆகும். சகல வினாக்களுக்கும் விடையளிக் கப்படல் வேண்டும்.

(ii) *கட்டுரைப் பரீட்சை*.- ஏதாவதொரு விடயத்துறை சம்பந்தமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 விடயங்கள் தொடர்பாக 3 கட்டுரை எழுதப்பட வேண்டும். இவை ஒரு குறித்த பாடத்தை கற்கைத் துறைக்கு உரியதாக இருக்கக்கூடாது. பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுத் திறன் கருத்துக்களை வெளியிடும் நிபுணத்துவம் சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டுரையின் தரம் தீர்மானிக்கப்படுவது உரிய துறை சம்பந்தமாக இருக்கும் ஆக்கத்திறன் மற்றும் சிந்தனைத் திறன் போன்றவற்றை அளவீடு செய்வதும் அவற்றைச் சமர்ப்பிக்கும் முறைக்கமையவாகும்.

அரச சேவை ஆணைக்குழு சபையின் உத்தரவின் பிரகாரம்.

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.
2010, திசெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்பத்திரம்

(அலுவலக உபயோகத்திற்காக)

இலங்கை கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்கு
(பொது ஆளணிக்கோப்பு/விசேட ஆளணிக்கோப்புக்கு)
உத்தியோகத்தர்களைச் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த
போட்டிப் பரீட்சை - 2010

## Open Competitive Examination for Recruitment to Class III (General Carder/Special Carder) of the Sri Lanka Education Administrative Service - 2010

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

பரீட்சைக்குத் தோற்றும் "ஆளணிக்கோப்பு"
பொது ஊழியர் கோப்பு - 1
விசேட ஊழியர் கோப்பு - 2
இரண்டிற்கும் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

விண்ணப்பிக்கும் ஆளணிக்கோப்பு/விசேட ஆளணிக் கோப்பு இருந்தால் பாடத்துறையின் குறியீட்டு இலக்கத்தை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடுக. (வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைவாக)

| ஆளணிக்கோப்பின் பெயர் | பாடத்துறையின் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| பொது | | |
| விசேடம் | | |
| விசேடம் | | |

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : Mr./Mrs./Miss ----.
(உ-ம் : Mr./Mrs./Miss : SILVA, G. A.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

1.4 பெண்-1, ஆண்-0 :
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.1 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) :----.

2.2 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3.

3.1 இன வகை :
(சிங்களம்-1, தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனையவை-5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :
(திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.4 2011.01.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. இப்பதவிக்குத் தகைமை பெறுவதற்காக பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலம் :----.

5. கல்வித் தகைமை :

5.1 பட்டம் அல்லது வேறு தகைமைகள் பெற்ற திகதி :----.
(தயவுசெய்து வர்த்தமானி அறிவித்தலில் 8"ஆ" சரியாக வாசிக்கவும்.)

5.2 பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

5.3 பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்த இலக்கம் :----.

5.4 வெளிவாரி/உள்வாரி :----.

5.5 பட்டம் :----.

5.6 பாடங்கள் :----.

5.7 வகுப்பு :----.

5.8 உயர்/கீழ் :----.

5.9 பரீட்சை இலக்கம் :----.

5.10 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.

6. 1991, 2002, 2005 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆவது வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா ? : ----.

7. பரீட்சைக் கட்டணம் :

இங்கே பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டவும்
(பிரதியினை தம்வசம் வைத்திருக்கவும்.)

8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கெட்டியவரை உண்மையானதென்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ......................... மற்றும் ............................. ஆந் திகதி கொண்ட பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது

என்றும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை விதிகளுக்கமைய கட்டுப்படவும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கமைய நான் தகைமை யற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் எனது பரீட்சார்த்தி நிலைமையை இரத்துச் செய்வதற்கு அல்லது எடுக்கப்படும் ஏதாவதொரு தீர்மானத்திற்கு நான் இணங்குகிறேன். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக் கப்பட்ட பின்னரேனும் தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்குவதற்கும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**ஒப்பத்தை உறுதிசெய்தல்**

இங்கு கையொப்பமிடப்பட்டுள்ள ............................ இல் வசிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................ நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்தவரெனவும் அவர் என் முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் உறுதி செய்கிறேன்.

----,
உறுதிசெய்பவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

12-1015/2

---

**கல்வி அமைச்சு**

இலங்கை கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்கு (பொது ஊழியர் கோப்பு/விசேட ஊழியர் கோப்பு) சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010

இந்த அறிவித்தலில் "செயலாளர்" என்ற பதம் கல்வி அமைச்சின் செயலாளர் என்பதனையும் "சேவை" என்ற பதம் இலங்கை கல்வி நிர்வாக சேவை என்பதனையும் 'பிரமாணக் குறிப்பு' என்பது இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பு என்பதனையும் குறிக்கும்.

கல்வி அமைச்சின் கீழேயுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்பு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்காக மட்டுப்படுத் தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்றினை கல்வி அமைச்சின் செயலாளருக் கூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப் படும். பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவையின் III ஆம் வகுப்பிற்கு வெற்றிடங்களின் 45% இற்கு மேற்படாதவாறு வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. **பரீட்சை திகதி**.- இந்தப் பரீட்சை 2011, ஏப்பிறல் மாதத்தில் நடைபெறும். இந்தப் பரீட்சையினைப் பிற்போடும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

3. **ஆளணிக் கோப்புக்கு மற்றும் நியமிக்கப்படும் திகதி**.- (i) சேவையின் III ஆம் வகுப்பு ஆளணிக் கோப்பானது பொது ஊழியர் கோப்பு மற்றும் விசேட ஊழியர் கோப்பு என்பவற்றைக் கொண்டதாகக் காட்டப்படும். நியமனங்களின் எண்ணிக்கை, நியமன அமுலாக்கல் திகதி கல்வி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். ஒரு சில வெற்றிடங்களையோ அல்லது முழு வெற்றிடங்களையோ நிரப்பும் அல்லது நிரப்பாதுவிடும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாள ருடையதாகும்.

(ii) ஒரு விண்ணப்பதாரி பொது ஊழியர் கோப்புக்கு மேலதிகமாக விசேட ஊழியர் கோப்புக்குகீழ் பின்வரும் 3(ஆ) வகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத் துறையில் வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி பொது ஆளணனி கோப்பு மற்றும் விசேட ஆளணிக் கோப்புக்கு பொருத்தமான துறைகள் இரண்டிற்கு விண்ணப்பிக்கலாம்.

விசேட ஊழியக் கோப்பின்கீழ் விண்ணப்பிப்பதாயின் விண்ணப் பிக்கின்ற பாடப்பரப்பின் பிரதான பாடங்களில் ஒன்றினை பட்டப் படிப்பிற்கு தெரிவுசெய்திருத்தல் கட்டாயம். பட்டப்படிப்பை மேற்கொள் கின்ற உப பாடங்களின் எண்ணிக்கைகளில் 1/3 விண்ணப்பிக்கின்ற பாடப்பரப்பிற்குரிய பாடமாக இருக்க வேண்டும்.

திட்டமிடல் மற்றும் விசேட கல்வி போன்ற விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் வேறாகக் காட்டப்பட்டுள்ளன.

(iii) விசேட ஆளணிக் கோப்பின் விடயப் பரப்பு மற்றும் அதற்குரிய குறியீடுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. தாம் விண்ணப்பிக்கின்ற விடயப்பரப்பு, அதற்கான குறியீடுகள் விண்ணப்பப்பத்திரத்தின் உரிய இடத்தில் குறிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறியீட்டு இலக்கம்
(அ) பொது ஊழியக் கோப்பு 11
(ஆ) விசேட ஊழியக் கோப்பு

| விடயப்பரப்பு | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| ஆங்கிலம் | 21 |
| கணிதம் | 22 |
| விஞ்ஞானம் | 23 |
| சித்திரக்கலை | 24 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 25 |
| சங்கீதம் (மேலைத்தேய) | 26 |
| நாட்டியம் | 27 |
| உடற்கல்வி | 28 |
| விவசாயம் | 29 |
| வணிகக்கல்வி | 30 |
| கைப்பணி | 31 |
| மனையியல் | 32 |
| விசேட கல்வி | 33 |
| திட்டமிடல் | 34 |
| அரபு | 35 |
| தகவல் தொழில்நுட்பம் | 36 |
| பிரிவென் | 37 |

**முக்கிய குறிப்பு**.- மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கீழ் விசேட ஆளணிக் கோப்பின் விசேட கல்வி என்ற பாடப்பரப்பிற்கு விண்ணப்பிப்பதாயின் பின்வரும் பட்டம்/பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்ற தகைமைகளை நிறைவேற்றி இருத்தல் வேண்டும். விசேட

தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி (விசேட கல்வி) தொடர்பாக வழங்கப்படுகின்ற கல்விமாணிப் பட்டம் -

* விசேட கல்வி தொடர்பான பட்டமேற் பின் கல்வி டிப்ளோமா
* விசேட கல்வி தொடர்பான கல்விமாணி அல்லது கல்வி முதுநிலைமாணிப் பட்டம்

விசேட ஆளணிக் கோப்பில் திட்டமிடல் பாடப்பரப்பு தொடர்பாக விண்ணப்பிக்கின்ற பின்வரும் பட்ட அல்லது பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியினைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும். புள்ளிவிபரவியல் பாடத்தினை பட்டப்படிப்பின் ஒரு பாடமாக அல்லது பட்டத்திற்கான ஒரு உப விடயமாக கற்றிருத்தல்/கணிதம் ஒரு பட்டப் பாடமாக அல்லது பட்டத்திற்கான உப பாடமாகக் கற்றிருத்தல்/முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் நுட்பம் போன்ற விடய பரப்பு பட்டப் பிரதான பாடமாக அல்லது உப பாடமாக கற்றிருத்தல் கல்வி, நிதியியல், அளவையியல் கல்வி போன்ற விடயப்பரப்பு பட்டப்பிரதான பாடமாக அல்லது உப பாடமாகக் கற்றிருத்தல்.

சமூக விஞ்ஞானம் பட்டப் பிரதான பாடமாக அல்லது பட்ட உப பாடமாகக் கற்றிருத்தல். உயிரியல், பௌதிகவியல் பட்டப்படிப்புடன் புள்ளி விபரவியல் ஆராய்ச்சியும் பட்ட உப பாடமாக விடய வகுதியாகக் கற்றிருத்தல்.

கிரயவியல், பொருளியல் பட்டப் பாடங்களுடன் கிரயவியல் பகுப்பாய்வு முறை, புள்ளி விபரவியல் முறை, அல்லது பொருளாதார ஆராய்ச்சி முறைமை என்பன உப பகுதிகளாக பட்டப்படிப்பு பாடமாக பூர்த்திசெய்திருத்தல்.

(iv) காணப்படும் வெற்றிடங்களுக்கேற்ப பொது ஆளணிக்கோவை அல்லது மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு துறை அல்லது துறைகள் சிலவற்றினை நிரப்புதல் அல்லது நிரப்பாதுவிடல் தொடர்பான உரிமை கல்வி அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

**4. சேவை நிபந்தனைகளும் சேவையில் நியமித்தல் தொடர்பான நிபந்தனைகளும்.**- (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 423/12 மற்றும் 1986.10.15 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும் எதிர்காலத்தில் செய்ய விருக்கின்ற திருத்தங்களுக்கேற்ப இலங்கைக் கல்வி நிருவாக சேவை பிரமாணக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கேற்ப இந்தப் பிரமாணக் குறிப்பு மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் திருத்தங்கள், அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் சேவையின் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படுவர்.

(ii) பதவிக்கு நியமனம் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கேற்ப மத்திய அரசின் பதவிகளுக்கும் மாகாண அரச சேவை பதவிகளிலும் சேவையாற்ற வேண்டும்.

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்டது போன்று மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்படுகின்ற காலத்தினுள் உத்தியோகத்தர் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் நிர்வாக ஒழுக்க விடயங்களுக்குட்படல் வேண்டும். இருப்பினும் பதவி குறைத்தல் ஆணைக்கு எதிராக கல்வி அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையிடும் உரிமை அதிகாரிக்குண்டு.

(iv) பொது ஆளணிக் கோவைக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் அரச பாடசாலை யொன்றின் அதிபராகக் கடமையாற்றாதவிடத்து நியமிக்கப்பட்டதன் பின்னர் 3 ஆண்டுகள் அரச பாடசாலை ஒன்றின் அதிபராக கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். ஏதாவது உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாறு சேவை செய்த காலம் 3 ஆண்டுகளைவிடக் குறையும் சந்தர்ப்பத்தில் நியமனம் செய்யப்பட்ட பின்னர் மீதியினை நிறைவேற்றுதல் வேண்டும். முன்பு சேவையாற்றிய காலமும் 3 ஆண்டுகள் என்கின்ற காலமும் இடையே உள்ள வேறுபாடு சமனாகக் காணப்பட வேண்டும்.

(v) இந்தப் பதவி நியமனமானது, நிரந்தரமானதும் ஓய்வூதியக் கொடுப்பனவுக்குரியதும் ஆகும். விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவிற்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும். நியமனம் பெற்று முதல் ஓராண்டு காலமாகக் கொள்ளப்படும்.

**5. சம்பள முறைமை :**

ரூ. 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555
ரூ. 24,870-முன் I ஆவது வினைத்திறன்காண் பரீட்சை
ரூ. 26,805-முன் II ஆவது வினைத்திறன்காண் பரீட்சை

**6. தகைமைகள்.**- (அ) இந்த வகுதியின் இறுதியில் காணப்படுகின்ற அம்சங்களுக்கமைவாக பின்வரும் தகைமைகளைக் கொண்ட அரச பாடசாலைகளின் அல்லது உதவி பெறும் பாடசாலை ஒன்றின் அல்லது பிரிவென் ஆசிரியர் ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதி முடியும் மாதத்திற்கு முந்திய மாதத்தின் இறுதித் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் ;

(இ) (i) பொது ஆளணிக்கோவை பதவிக்காக பட்டத்தினைப் பூர்த்திசெய்தபின் பட்டம் பெற்றபின் குறைந்தது 5 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஒரு பட்டதாரியாக அல்லது கல்விச் செயலாளரினால் பட்டத்திற்குச் சமமாகக் கருதுகின்ற தொழில்சார் அல்லது வேறு பரீட்சைகளில் சித்தியடைந் திருத்தல் அல்லது பயிற்சி ஆசிரியச் சான்றிதழுடன் கூடிய பட்டதாரி அல்லது கல்விச் செயலாளரினால் பட்டதாரிக்குச் சமமாகக் கருதப்படுகின்ற தொழில்சார் அல்லது பயிற்சியின்பின் குறைந்தபட்சம் 5 வருடக் கற்பித்தல் அனுபவம் கொண்ட பயிற்சி ஆசிரியர் அல்லது பூரணமாக 10 வருடகால சேவையுடைய பயிற்சி ஆசிரியராக இருத்தல்

**குறிப்பு.**- பயிற்சி ஆசிரியர்களாக ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் முதல் நியமனத் திகதி தொடக்கம் சேவைக்காலமும் சேவையில் இருக்கும்போது பட்டம்பெற்ற ஆசியர்களைப் பொறுத்த வரையில் அந்தப் பட்டத்தை பூர்த்திசெய்த திகதி தொடக்கம் சேவைக்காலமும் இந்த 5 ஆண்டு காலத்தி னுள் சேர்த்துக்கொள்ளப்படும்.

(ii) விசேட சேவை ஆளணிக் கோப்பு பதவிகளுக்காக ஆகக் குறைந்தது 3 ஆண்டுகள் விண்ணப்பிக்கின்ற பாடங்களின் கற்பித்தல் மற்றும் உரிய விடயசார் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் ஆசிரியராக அல்லது கல்விச் செயலாளரினால் சமமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தொழில்சார் ஏனைய பரீட்சைகளில் சித்தி அடைந்திருத்தல்.

**குறிப்பு**.- (1) நடனம், கீழைத்தேய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், கைப்பணி, உடற்கல்வி, சித்திரக்கலை, மனையியல், விசேட கல்வி பிரிவெனா மற்றும் ஆங்கிலம் ஆகிய விடயம் தொடர்பான ஆசிரியராக அல்லது குறித்த பாடத்துறை சம்பந்தப்பட்ட ஆசிரியராக 5 ஆண்டுகளுக்கு குறையாத சேவையையுடைய உயர் பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா. த.) பரீடசையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி என்பன உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகைமையுடையவராகக் கருதப்படுவார்.

7. **வேறு தகைமைகள்**.- விண்ணப்பதாரி சிறந்த ஆரோக்கிய மானவர் என்பதனையும் சிறந்த நல்லொழுக்கமானவர் என்பதனையும் கல்வி அமைச்சின் செயலாளர் திருப்தி காணல் வேண்டும். சிறந்த சுகாதார தேக ஆரோக்கியமான, சிறந்த பார்வை கொண்டவராகவும் நாட்டில் எந்தப் பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடற்தகுதி கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

**குறிப்பு** : (i) மேலுள்ளபடி சேவைக்காலம் 3 ஆண்டுகள்/ 5 ஆண்டுகள்/10 ஆண்டுகள் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

(ii) 7 ஆண்டுகளுக்கு மேல் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீடசைக்குத் தோற்றுவது அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை இரண்டிலும் 7 தடவைக்கு மேல் தோற்றுவதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(iii) விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு முன் 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலம் இல்லாதவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

(iv) இந்தக் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கு ''எச்சரிக்கைகள்'' தவிர ஏதாவது தண்டனை பெற்றிராவிட்டால் (சேவை/ திணைக்களம் சார் அல்லது பரீட்சைகளின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை மாத்திரம் சம்பள உயர்வு பெற முடியாமை போன்ற காரணத்தினால் உத்தியோகத்தர் ஒருவர் தகுதியற்றவராகக் கொள்ளப்பட மாட்டார்.) ஒருவர் திருப்திகரமான சேவைக்காலம் உள்ளவராக கொள்ளப்படும்.

(v) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் சேவை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூ. 1,000 ஆகும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ஏதாவது ஒரு மாவட்ட/பிரதேச செயலகத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைப்பதற்காக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். மாவட்ட/ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தப்பட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் ஒட்டப்படல் வேண்டும். இக்கட்டணமானது எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது. வேறு பரீட்சைக் கட்டணமாக மாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை விண்ணப்பதாரி கைவசம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்குப் பயனுடையதாகும்.

9. **விண்ணப்பிக்கும் முறைமை**.- (அ) விண்ணப்பப்படிவம்- இந்த அறிவுறுத்தல்களின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய இருப்பதுடன் 8 1/2 x 11 அளவிலான கடதாசி ஒன்றின் இரு பக்கமும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01-04 முற்பகுதியிலும் ஏனையவை 2 ஆவது பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பம் அமைய வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் விபரங்கள் தனது சொந்த எழுத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுவதுடன் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப இல்லாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையான தகவல்கள் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியினை தன்னகத்தே கொண்டிருப்பது பயனுடையதாகும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரிகள் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ள மொழியில் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் 1.1, 1.2, 2.1, 2.2 மற்றும் 2.3 உப அலகுகள் ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தயார் செய்கையில் தலைப்பு, பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் நிரப்புதல் வேண்டும்.

(இ) மேலுள்ள தகவல்களுக்கமைய தயாரித்த விண்ணப்பப் படிவங்களில் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பதிவுத்தபாலில் ''பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு 2011.01.31 ஆந் திகதிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு தற்காலிகமாக இணைப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஆயின் மாகாணக் கல்விப் பணியின் ஊடாக விண்ணபத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக ''இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்பிற்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010'' எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப் படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

(ஈ) கல்வி அமைச்சின்/பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்களின் சொந்தப் பெயர்களுக்கு அனுப்புகின்ற விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்பட மாட்டாது.

(உ) சகல வழிகளிலும் பூர்த்திபெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைந்தோ/ தாமதமாகவோ கிடைக்கப்பெறின் எவ்வித முறையீடுகளும் ஏற்கப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை தொடர்பாக விண்ணப்ப தாரிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டதும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் புதினப்பத்திரிகைகள் மூலமாக அறிவித்தல் ஒன்று வழங்கப்படும். அவ்வாறான அறிவித்தல் தொடர்பாக கவனம் செலுத்துவது முக்கியமாகும். அறிவித்தல் பிரசுரமாகி 2/3 நாட்களின் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காதபட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்களிடமுள்ள விண்ணப்பப் படிவம், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிசெய்த

நிழற்பிரதியினையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியில் உள்ள பிரதேசம் எனின் அனுப்பவேண்டிய தொலைநகல் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தங்களது வேண்டுகோள் கடிதத்தினை தம்மிடம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்தரும் விடயமாகும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி ஒருவர் தனக்கு உரித்தான பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தன்னுடைய கையொப்பத்தினை உறுதிசெய்த அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகள் பின்பற்றவேண்டிய பரீட்சை ஒழுக்க விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அந்த சட்ட திட்டங்களுக்கமைய ஒழுகாதவிடத்து பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ) விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கலானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகுதிகளையும் பெற்றுள்ளார் எனக்கொள்ள கூடாது.

(ஆ) பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்.- தான் தோற்றுகின்ற சகல விடயப்பரப்பு தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திகாணும் வகையில் சகல பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தினுள் தன்னுடைய ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். இது தொடர்பாக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

11. **பிழையான தகவல்கள் வழங்கலுக்கான தண்டனை**.- விண்ணப்பதாரியொருவர் தகுதியற்றவர் என உறுதி செய்யப்பட்டால் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் பின்போ எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அனுமதியினை இரத்துச்செய்ய இடமுண்டு. வழங்கப்பட்ட ஏதாவது விடயம் உரிய பதவிக்கு நியமனம் செய்யப்பட்டபின் வெளிப்படுமாயின் அல்லது முக்கிய தகவல்களை தெரிந்து மறைத்திருப்பின் சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

12. **மொழி மூலம்**.- (அ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது அரச சேவைக்கு சேர்த்துக்கொள்கையில் தகைமைபெற்ற பரீட்சை/ நேர்முகப் பரீட்சை நிறைவுசெய்த மொழி மூலத்தினூடாக அல்லது அரச கரும மொழியில் ஆகும்.

**குறிப்பு**.- (i) விண்ணப்பதாரி சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் தான் விடையளிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **பரீட்சித்தல் முறைமை**.- (அ) பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய ஓர் எழுத்துப் பரீட்சையும் ஒரு நேர்முகப் பரீட்சையும் :-

(i) நுண்ணறிவுப் பரீட்சை - (காலம் : 1 1/2 மணி) (விடய இலக்கம் 1) - 100 புள்ளிகள்
(ii) கிரகித்தல் வினாப்பத்திரம் (காலம் : 1 மணி) (விடய இலக்கம் 2) - 100 புள்ளிகள்
(iii) கல்வி நிர்வாகத்துறை சார்ந்த விடயம் பற்றிய ஆய்வு (காலம் : 2 மணி) (விடய இலக்கம் 3) - 100 புள்ளிகள்

14. **தெரிவுசெய்யப்படும் முறைமை**.- (அ) நியமனம் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்படுதலானது எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்று மொத்தப் புள்ளிகள் தேர்ச்சிகளின் வரிசைப்படி தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய பதவிக்குத் தகுதியுண்டா எனப் பரிசீலனை செய்ததன் பின்னரே ஆகும். சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் ஒருவரைவிட மேலதிகமாகக் காணப்படும் பட்சத்தில் கல்விச் செயலாளர் தீர்மானம் எடுப்பார்.

(ஆ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்படும் ஏதாவது விண்ணப்பதாரி அல்லது விண்ணப்பதாரிகள் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாது காணப்படுமிடத்து வெற்றிடம் ஏற்படுமிடத்து திறமை வரிசைப்படி பட்டியலில் அடுத்துள்ள விண்ணப்பதாரியினைக் கொண்டு நிரப்பப்படும்.

15. **பாடத்திட்டம் (விபரம்)** :

(i) கிரகித்தல் (1 1/2 மணி நேரம்).- விண்ணப்பதாரிகளுக்கு சிறிய பகுதிகள் கொடுக்கப்பட்டிருக்கும். சில பகுதிகளைப் பொறுத்தவரையில் பகுதியின் பொருளடக்கத்துடன் தொடர்பான மாற்று வாசகங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றுள் மிகப்பொருத்தமான வாசகத்தினை பரீட்சார்த்தி தேர்ந்தெடுத்து குறிக்க வேண்டும். வேறு சில பகுதிகளைப் பொறுத்தவரையில் பகுதிகளின் அர்த்தத்தினை பரீட்சார்த்திகள் புரிந்துகொள்கின்றார்களா என்பதனைச் சோதிக்க வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இது கட்டாய வினாக்களாகக் காணப்படும்.

(ii) நுண்ணறிவுப் பரீட்சை (1 மணி நேரம்).- விண்ணப்பதாரிகளின் தர்க்க முறையான நியாயத்தினை காட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும். இதில் பல்தேர்வு, குறும் பதில்கள் கொண்ட 50 கேள்விகளைக் கொண்டதாகக் காணப்படும்.

(iii) கல்வி நிர்வாகத்துறை சார்ந்த விடயம் பற்றிய ஆய்வு - 2 மணி நேரம்.

16. இதில் கூறப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பத்தரமுல்லை,
2010, திசெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்பத்திரம்

**கல்வி அமைச்சு** ☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

இலங்கை கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்கு (பொது ஆளணிக்கோப்பு/விசேட ஆளணிக்கோப்புக்கு) உத்தியோகத்தர்களைஆட்சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010

## Limited Competitive Examination for Recruitment to Class III (General Carder/Special Carder) of the Sri Lanka Education Administrative Service - 2010

(வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பிரதிகள் இரண்டினைச் சமர்ப்பிக்குக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.)

பரீட்சைக்குத் தோற்றும் ஆளணிக்கோப்பு
பொது ஆளணிக் கோப்பு - 1
விசேட ஆளணிக் கோப்பு - 2
இரண்டிற்கும் - 3 ☐
(உரிய இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.)

விண்ணப்பிக்கும் ஆளணிக்கோப்பு/விசேட ஆளணிக் கோப்பு எனில் விடய அலகின் குறியீட்டு இலக்கத்தினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதியினுள் குறிப்பிடுக. (வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைவாக)

| ஆளணிக்கோப்பின் பெயர் | விடயப்பரப்பின் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| பொது | | |
| விசேடம் | | |
| விசேடம் | | |

1. பெயர் :-
   1.1 முதலெழுத்தினை இறுதியாக இட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
   Mr./Mrs./Miss :----.
   (உதாரணம்- Mr./Mrs./Miss SILVA G. A)

   1.2 பால் :
   பெண்-1, ஆண்-0 ☐
   (உரிய இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.)

   1.3 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   1.4 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

   | | | | | | | | | | |
   |---|---|---|---|---|---|---|---|---|---|
   | | | | | | | | | | |

2. நிரந்தர விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.
   3.1 தேசிய இனம் :
   (சிங்களம்-1, தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, வேறு-5) ☐
   (உரிய இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.)

   3.2 விவாக நிலை :
   (திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2) ☐
   (உரிய இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.)

   3.3 பிறந்த திகதி :

   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.4 2011.01.31 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. கல்வித் தகைமைகள் :

   (அ) (i) பட்டம் பெற்ற ஆண்டு :----.
   (ii) கற்ற பாடங்கள் :----.
   (iii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
   (iv) வெளிவாரி/ உள்வாரி :----.

   (ஆ) (i) பட்டப்பின் படிப்பு பூர்த்திசெய்யப்பட்ட ஆண்டு :----.
   (ii) கற்ற பாடங்கள் :----.
   (iii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

5. (i) ஆசிரியராக ஆரம்பத்தில் அரச சேவைக்குச் சேர்ந்த திகதி : ----.
   (ii) தற்பொழுது கடமையாற்றும் கல்வி வலயம் :----.
   (iii) 2011.01.31 ஆந் திகதிக்கு சேவைக்காலம் :----.

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. ஆசிரிய பயிற்சிபெற்ற ஆண்டு :----.
   ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பெயர் :----.
   பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.
   பயிற்சிபெற்ற விடயப் பரப்பு :----.
   பயிற்சியின் பின் 2011.01.31 ஆந் திகதிக்கு கற்பித்தல் அனுபவம் :

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

7. நீங்கள் தற்பொழுது வகிக்கும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :----.

8. நீங்கள் அரச சேவைக்கு இணைந்துகொள்ள தகுதிபெற்ற மொழி மூலம் :----.

9. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை வைத்திருக்கவும்.) |

10. இதற்கு முன் இந்தப் பரீட்சைக்கு மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் :----.

11. மேற்கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உண்மை என்பதுடன் பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்க ..................... மற்றும் ..................... திகதி கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிசெய்கின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டத்திற்கமைய நடக்கவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமுல்படுத்தும் சட்டதிட்டத்திற்கமைவாகவும் இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைவாக நான் பொருத்தமற்றவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும்போதோ எனது விண்ணப்பத்தினை இரத்துச்செய்ய ஏதும் தீர்மானம் மேற்கொள்ளப்படின் அதற்கு நான் இணங்குகின்றேன். இந்தப் பதவிக்கு நியமனம்பெற்ற பிறகும் கூட பொருத்தமற்றவர் எனக் கருதும் பட்சத்தில் சேவையில் இருந்து நீக்க உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிசெய்தல்**

வலயக் கல்விப் பணிப்பாளர்,

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் வண./திரு./திருமதி/செல்வி ............................. எனது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் என்பதனை இத்தால் உறுதி செய்கின்றேன்.

----,
அதிபரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

திகதி :----.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் வண./திரு./திருமதி/செல்வி ............................. எனது வலயத்தில் ............................... வித்தியாலயத்தில் கடமை புரியும் ஆசிரியர் என்பதுடன் 3, 5, 6, 7, 8, 9 மற்றும் 11 ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் அலுவலகத்தில் உள்ள சுயவிபரக்கோவையின் பிரகாரம் சரியானதென உறுதி செய்கின்றேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளர்/
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

திகதி :----.

12-1015/3

## இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 (2011)

2009.09.24 ஆந் திகதிய 1620/22 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சை பெறுபேறுகளின்படி திறமையின் அடிப்படையில் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவுசெய்யப்படுவார்கள். மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஏற்புடையதான சம்பளத்தொகுதி எம்என் 3-2006-ஏ ஆவதுடன் மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 15,005-4X180-6X240-11X320-20X360-ரூபா 27,885 ஆகும்.

**குறிப்பு**.- நியமனம் பெறும் காலத்தில் நடைமுறையில் இருக்கும் சம்பள ஏற்ற ஒழுங்குகள் விதிகளின்கீழ் சம்பள ஏற்றச் சலுகைகள் வழங்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பரீட்சை பெறுபேறுகளின் பேரில் இலங்கை அரச நூலகர் சேவையின் வகுப்பு III இற்கு நியமிக்கப்படும் அலுவலரொருவர் ஒரு வருட வேலைக்காலத்திற்கு உட்படுவார். வேலை வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதென திணைக்களத் தலைவர் திருப்தியுறுவாராயின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அலுவலர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்.

(ii) இப்பரீட்சை பெறுபேறுகளின்படி நியமனம் செய்யப்படும் பரீட்சார்த்திகள் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் இலங்கையில் எவ்விடத்திலேனும் நியமனம் செய்வதற்கும் ஆட்படுவர்.

(iii) நியமனம் பெற்று 5 வருடங்கள் கடந்து செல்ல முன், 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. **தகைமைகள்**.- இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(அ) அரசாங்க சேவையின் நூலக உதவியாளர்/நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் அப்பதவியில்

10 வருட முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்தும், விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன்முந்திய 5 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்தும் இருத்தல். (இதற்காக உச்ச வயதெல்லை வலுப்பட மாட்டாது.)

அத்துடன்

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலக வியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறி யில் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல் ; அல்லது

(ii) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியில் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு** .-

(I) சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஏற்புடைய தான சகல தகைமைகளையும் 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும் ;

(II) மேற்படி பந்தி 5.0 (அ) இன்படி கீழே (அ), (ஆ) வில் குறிப்பிட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள வர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப் பிக்கத் தகைமை யுடையவர்களாக கருதப்படுவர்.

(அ) 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்திற்கு உரிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முற்பட்ட 5 வருட காலத்திற்குள் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாது இருத்தல் (எச்சரிக்கை தவிர்ந்த).

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களை கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது :

| | **பாடம்** | **நேரம்** | **புள்ளிகள்** |
|---|---|---|---|
| (i) | நூலகவியல் | 3 மணித்தியாலங்கள | 100 புள்ளிகள் |
| (ii) | நுண்ணறிவுத் தேர்வு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| (iii) | பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்க்குறிப் பிட்டுள்ளவாறாகும் :

6.1 நூலகவியல்.- (1) நூலகங்களும் நூலகத்துவமும் :

(அ) நூலகங்களும் நூலக வரலாறும்
(ஆ) நூலகங்களின் சமூக வேலைப்பமு
(இ) நூலகங்களது பல்வேறுபட்ட ஆவணங்களதும் அச்சிடப்படாத ஊடகங்களினதும் ஆரம்பமும் விஸ்தரிப்பும்
(ஈ) கற்றறிந்த தொழிற்சங்கங்கள் :
 (i) இலங்கை நூலகச் சங்கம்
 (ii) அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நூலகச் சங்கங்கள்
(உ) நூல் நிலைய வகைகள் :
 (i) பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவன நூலகங்கள்
 (ii) அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நூலகங்கள்
 (iii) பொது நூலகங்கள்
(ஊ) நூலகக் குழுக்கள்
(எ) பேணிப்பாதுகாத்தலும் (conservation) காப்பீடும் (preservation)

(2) அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும் :

(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் அதன் நன்மைகளும்
(ஆ) நூல் வகைப்படுத்தலின் அடிப்படை அம்சங்கள்
(இ) துயிதசமதான பகுப்பாக்கத் திட்டம்
(ஈ) பட்டியலாக்கமும் அதன் நோக்கங்களும்
(உ) AACR2 பட்டியலாக்க சட்டக்கோவை
(ஊ) பதிவுகளும் நூல்களைப் பற்றிய விபரங்களும்
(எ) பட்டியலாக்கத்தின் வகைகள்

(3) நூலக வளங்களும் தகவல் சேவையும் :

(அ) பல்லின நூலக வளங்கள்
(ஆ) நூலக வளங்களை தெரிவுசெய்தலும் தெரிவுசெய்யும் செயற்பாடும்
(இ) ஏற்பும் ஏற்புச் செயற்பாடுகளும்
(ஈ) தளக்கோளவமைப்பு
(உ) இருப்பு மீளாய்வும் அகற்றல் செயற்பாடும்

(4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology)

(அ) நூல் நிலையங்கள் மீதான கணனித் தொழிநுட்பத்தின் செயல்விளைவுகள்

6.2 நுண்ணறிவுத் தேர்வு.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்துகொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

6.3 பொது அறிவு.- தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

(நுண்ணறிவுத் தேர்வு மற்றும் பொது அறிவு பற்றிய வினாத்தாள்கள் பரீட்சை திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு பரீட்சை வகுப்பீட்டின் கீழ் III ஆம் துறைக்கு உரியதாக தயாரிக்கப்படும்.)

நியமனத்திற்காக தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பதையாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூர்த்திசெய்கின்ற வாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 400. இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்தலாம். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராத வாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை

எதிர்கால தேவைக்காக தன்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச்செலுத்தப் படாததுடன் காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 x 29cm) (சாதாரண ஹாப்ஷீட்) அளவிலான தாளை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் 3 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4 முதல் அதனடுத்து வரும் பந்திகள் மறுபக்கங் களிலும் உள்ளடங்கும் வண்ணம் தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழியிலேயே விண்ணப்பம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்துகொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

8.1 உரிய மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் சரியாகப் பூர்த்தி செய்யாது முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப் பங்களை பூர்த்திசெய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ள தென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

8.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருப்பார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப் பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்க வில்லையென அறிய வருமிடத்து அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

8.3 விண்ணப்பங்களை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2010 (2011)" என்று குறிப்பிடவும்.

9. விண்ணப்பப்படிவத்தை சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்து தாம் சேவையாற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் ஊடாக 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அதற்காக தமது விண்ணப்பங்களை நேரகாலத்தில் திணைக்களத் தலைவர்களிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்ல.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப் பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடத்திலுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பிவைப்பதற்கான தொனைலநகல் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதம் போன்றவற்றை உங்கள் வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப்பயனுள்ளதாகும்.

11. நியமனத்திற்காக பரீட்சார்த்தி தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிப்பதற்கு திணைக்களத் தலைவர் இணங்க வேண்டும். விண்ணப்பத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள விதத்திலான சான்றித ழொன்றை திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை லீவு வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

12. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடி யான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. **பொய்யான தகவல்களுக்கு தண்டனை**.- விண்ணப்பப்பத்திரங் களை பூர்த்திசெய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப் பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

14. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது.

அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

15. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
2010, திசெம்பர் 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010 (2011)

## Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Government Librarians' Service - 2010 (2011)

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடவும்.)

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.
1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
உதா : PERERA A. B. C
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
2.2 அலுவலகத்தின் / திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3.
3.1 பால் :
பெண்-1, ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

3.3 தேசிய அடையாள அட்டை இல. :
☐☐☐☐☐☐☐☐☐☐

4. சேவை விபரங்கள் :
4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் : ----.
4.2 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.
4.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
4.4 தற்போது வகிக்கும் பதவியில் சேவை உறுதிப்படுத்தப் பட்டுள்ளதா ? :----.
4.5 நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தால், உறுதிப்படுத்துவதற்கு தகைமையடைந்த திகதி :----.
4.6 தற்போதைய பதவியின் சேவையை உறுதிப்படுத்தி வழங் கப்பட்ட கடிதத்தின் தொடர் இலக்கமும் திகதியும் :----.

5. கல்வித் தகைமைகள்.- பரீட்சை அறிவிப்பில் 5.0 பந்தி (ஆ) வின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக தகைமை பெறுவதற்கு நீங்கள் முதலாம் ஆண்டு சித்திபெற்றுள்ள மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறி தொடர்பான விடயங்கள்-
(i) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(ii) டிப்ளோமா பாடநெறியின் பெயர் :----.
(iii) முதலாம் ஆண்டு சித்தியடைந்த வருடம் :----.

6. பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்-
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.
(பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளவும்)

7. விண்ணப்பதாரரின் உறுதியுரை :
(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மை யானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருப்பதால் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக பூர்த்தி செய்திருப்பதால் ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள் ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்து கின்றேன்.

(ஈ) இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................. என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. ஆந் திகதியன்று இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(1) இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ............................ இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் ;
(2) அவர் அரசாங்க நூலக உதவியாளர்/நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், அப்பதவியில் 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் 10 வருட முனைப்பான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ளார் என்றும் ;
(3) நூலக உதவியாளர்/நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தி அவருக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளதென்றும் ;
(4) அவர் 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் குறைந்தபட்சம் 5 வருட காலம் தொடர்ந்தும் திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளார் என்றும் ;
(5) அவரின் வேலை மற்றும் நடத்தையின்படி 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் ;
(6) அவர் 2011, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் கிடைக்கவேண்டிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் ;
(7) இப்பரீட்சை பெறுபேறுகளின் பேரில் நியமனத்திற்காக தெரிவுசெய்யப்பட்டால் அவர் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ;
(8) அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்திலுள்ள ஆவணங்களுடன் பொருத்தமாக உள்ளன என்றும் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளிற்கமைய அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகவுடையவரென்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு**.- (i) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை அலுவலரொருவரால் மட்டும் இச்சான்றிதழ் கையொப்பமிடப்படல் வேண்டும். சான்றுப்படுத்தும் அலுவலர் விண்ணப்பத்தில் உள்ளடங்கும் விடயங்கள் எல்லா அம்சங்களிலும் சரியானது என்பதில் திருப்தியுறுதல் வேண்டும்.

(ii) தகைமைக்குரிய தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களின் விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படலாகாது.

12-1117

---

**கல்வி அமைச்சு**

**சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2010**

கல்வி அமைச்சின் கீழ்க்காணப்படும் இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவி வெற்றிடத்திற்காக சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் தகைமை கொண்டோரை தேர்ந்தெடுப் பதற்கான போட்டிப் பரீட்சை அரச சேவை ஆணைக்குழு சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் வெற்றிடங்களில் 30% இற்கு மேற்படாத எண்ணிக்கையானோரை நியமிக்க கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*2*. **பரீட்சையின் திகதி மற்றும் இடம்**.- இப்பரீட்சை 2011, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச் செய்ய அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

*3*. **ஊழியர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி**.- ஊழியர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி அரசசேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்ப அல்லது நிரப்பாதிருப்பதற்கான அதிகாரம் அரச சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

**4. சேவை நிபந்தனை மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1986.10.15 ஆந் திகதிய 423/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986.03.12 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவையின் பிரமாணக் குறிப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பின் மீது பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் அரச சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் III வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ii) சேவைக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவையின் அடிப்படையில் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்ற கட்டுப்பட வேண்டும்.

(iii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய உதவு தொகைக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். இந்நியமனம் ஒரு வருடத்திற்கு பதிற்கடமை அடிப்படையிலாகும்.

**5. வருடாந்த சம்பள அளவுத்திட்டம்.**- *III* ஆம் வகுப்பு.- ரூ. 22,935-10×645 - 8×790 - 17×1,050 - ரூபா 53,555 ; ரூ. 24,870- இற்கு முன்னர் I ஆவது வினைத்திறன்காண் பரீட்சை ; ரூ. 26,805- இற்கு முன்னர் II ஆவது வினைத்திறன்காண் பரீட்சை.

**6. தகைமைகள்.**- இவ்வாசகத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின் ஒழுங்குவிதிகளுக்கமைய கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட தற்பொழுது சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் நியமிப்பதற்கான பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர் :-

(i) இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகாலம் சேவையாற்றியுள்ள மற்றும் அச்சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

(ii) 03 வருட சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது 2011.01.31 ஆந் திகதி தொடக்கம்.

(iii) சகல விண்ணப்பதாரர்களும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**குறிப்பு**.-2011.01.31 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடங்களுக்குள் அனைத்து சம்பள அதிகரிப்புகளும் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அக்காலத்திற்குள் ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படாத உத்தியோகத்தர் மாத்திரம் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டவர் என்று கருத்திற்கொள்ளப்படும். விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமையற்றவர் ஆவர். பரீட்சைகள் நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே இந்த சட்டதிட்டங்கள் மீறல் தண்டனைக்குட்படவேண்டி வரும்.

**7. விண்ணப்பிக்கும் முறை.**- (i) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பரீட்சார்த்தி விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் 1-5 வரையிலான பகுதி முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் தங்கள் சொந்த கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். தமது விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்பட வேண்டும். இருப்பினும் விண்ணப்பப்படிவத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது பகுதிகளின் உப பிரிவுகளை ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில் நிரப்ப வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு 2011.01.31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கக்கூடியவாறு அதற்கு முன்னர் தாம் அடங்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விச் செயலாளருக்கு பொறுப்பளிக்க வேண்டும். (பரீட்சார்த்தியின் சொந்த ஆவணங்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது அவசியம் என்பதனால்) ;

(iv) கல்வி அமைச்சு அல்லது அரசசேவை ஆணைக்குழு அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுக.

(v) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமற்போதல் அல்லது தாமதித்துக் கிடைப்பது தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(vi) விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் முறைக்கு ஏற்ப இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதியையும் பதிவுசெய்த பற்றுச் சீட்டையும் கொழும்புக்கு வெளியேயாயின் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கமும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதமும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு பிரயோசனமளிக்கும்.

(vii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் ஏதாவது ஒரு மாவட்ட/ பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்கான கட்டணம் செலுத்தல்

வேண்டும். பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இந்தக் கட்டணம் மீள அளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றவோ முடியாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை கைவசம் வைத்திருப்பது பிரயோசனமாகும்.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்டுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி மண்டபப் பொறுப்பாளருக்கு தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்கப் பட்டிருப்பது பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்தவர் என்பதனை ஏற்றுக்கொண்டல்ல என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.- பரீட்சை மத்திய நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஏதாவதொன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;

9. **போலித்தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலேனும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தை இரத்துச் செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் போலியானது என பதவிக்குத் தேர்ந்தெடுத்ததன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதாவதொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்றை மறைத்திருப்பின் சேவையிலிருந்து நீக்க சந்தர்ப்பம் உண்டு.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடய மிருப்பின் அது குறித்து இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழு வினால் எடுக்கப்படும்.

11. **மொழி மூலம்**.- (அ) பரீட்சை- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றவேண்டியது அரச சேவையில் இணைந்துகொள்வதற்காக தகைமைபெற்ற பரீட்சை/ நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலமாக இருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பின்னர் மாற்றியமைக்க விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. **தேர்ந்தெடுக்கும் முறை**.- சிரேஷ்ட மற்றும் பொது உளச்சார்பு பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளை அடிப்படை யாகக் கொண்டு தகைமைத் தொடருக்கமைய அடிப்படைத் தகைமை களைப் பரிசீலனைசெய்து நியமனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும்.

| | புள்ளிகள் |
|---|---|
| சிரேஷ்ட தரத்திற்காக - | (ஆகக்கூடியது) 100 |
| பொது விவேகப் பரீட்சைக்காக - | (ஆகக்கூடியது) 50 |
| மொத்தப் புள்ளிகள் - | 150 |

(i) சிரேஷ்ட தரம் : பதவிக்கு விண்ணப்பிப்பதற்காகத் தேவை யானதென 07 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச சேவைக்காலமான 03 வருடங்களைத் தவிர அத்தரத்தில் எஞ்சிய திருப்திகரமான சேவைக்காலம் சிரேஷ்ட தரத்திற்காக புள்ளி வழங்க கணிப்பீடு செய்யப்படும். ஒரு வருடத்திற்கு 8 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் ஒரு வருடத்தைவிடக் குறையாத காலத்திற்காக 3 மாதத்திற்கு 2 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் என்ற உச்ச அடிப்படையில் வழங்கப்படும்.

(ii) பொது விவேகப் பரீட்சை.- பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் வழங்கப்படும் ஒரு மணித்தியால வினாத்தாள் இதற்காக வழங்கப்படும். கல்வியின் விழுமியங்கள் மற்றும் கல்வியின் எதிர்பார்ப்பும் பயன்பாடுகளும் தொடர்பான செயற்பாடுகள், பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்கள் உட்பட அமைப்புகளுக்குத் தேவைப்படும் ஊழியர் எண்ணிக்கையின் மூலம் உயர்ந்தபட்சப் பயன்பாடு கிடைக்கக்கூடியவாறு கேள்விகள் உள்ளடங்கியுள்ளன.

13. **தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்**.- (i) சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையிலான பரீட்சைக்காகப் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்பத் தேவைப்படும் வெற்றிட அளவுகளுக்கு உரியதான எண்ணிக்கைக்கு மாத்திரம் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

(ii) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட ஏதாவதொரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகள் உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதிருப்பின் ஏதாவதொரு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் தகைமைத் தொடருக்கமைவான பட்டியலில் அடுத்த பரீட்சார்த்தியின் மூலம் அவ்வெற்றிடம் நிரப்பப்படும் ;

(iii) சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் ஒருவரை விட அதிகமாக இருப்பின் அது தொடர்பாக அரச சேவை ஆணைக்குழு வினால் இறுதித் தீர்மானமெடுக்கப்படும்.

(iv) நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சார்த்தியின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

அரச சேவை ஆணைக்குழு சபையின் உத்தரவின் பிரகாரம்,

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2010, திசெம்பர் 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)

சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2010

## Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Educational Administrative Service on seniority and merit - 2010

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.
(i) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) Mr./Mrs./Miss. :----.
(உதாரணம்- Mr./Mrs./Miss. SILVA G. A)
(ii) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.
(i) தற்போது கடமையாற்றும் இடமும் அலுவலகத்தின் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(iii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3.
(i) பால் :
பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

(ii) இன வகை :
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத் தமிழ் - 3
முஸ்லிம் - 4
ஏனையவை - 5
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

4. (i) பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) 2011.01.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

(iii) விவாகமானவரா ?/விவாகமாகாதவரா? :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

5. சேவை விபரம் :
(i) முதல் நியமனப் பதவியும் நியமனத் திகதியும் : ----.
(ii) தற்போது நீர் உள்ளடங்கும் மாகாண கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.
(iii) அதிபர் - 1 தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

6. கல்வித் தகைமை :----.

7. தொழில் தகைமை :----.

8. பங்குபற்றியுள்ள பயிற்சிப் பாடநெறி தொடர்பான விபரம் :----.

9. 2011.01.31 ஆந் திகதிக்கு அண்மித்த 5 வருடங்களுக்குள் குற்றம் ஒன்றுக்கு பெற்ற (எச்சரிக்கை தவிர) தண்டனை தொடர்பான விபரம் :----.

10. (i) 2011.01.31 ஆந் திகதிக்கு அண்மித்த 5 வருடங்களுக்கு சகல சம்பள அதிகரிப்புக்களையும் பெற்றுள்ளீரா ? :----.
(ii) பெறாதிருப்பின் அதற்கான காரணம் :----.

11. தங்களுக்கெதிராக தற்பொழுது ஏதாவதொரு ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெறுவதாயின் அதன் தற்போதைய நிலைமை ? :----.

12. கடந்த 5 வருடங்களுக்குள் சம்பளமற்ற அல்லது அரைச் சம்பள விடுமுறை பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம் :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய இலங்கைக் கல்வி நிருவாக சேவைக்கு சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்திற்கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது என்றும் சரியானதென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.
திகதி :----.

மேற்கூறப்பட்ட 6 தொடக்கம் 12 வரை குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் சொந்த ஆவணங்களுக்கமைய சரியானதென உறுதி செய்கிறேன்.

----,
வலய க. ப./மாகாண க. ப./மாகாணச்
செயலாளர்.

திகதி :----.

பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 செலுத்திப்பெறப்பட்ட பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தங்களிடத்தில் வைத்திருக்கவும்.)

12-1015/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.